பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 06 2024 **THURSDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி சற்றுமுன் இத்தாலி புறப்பட்டு சென்றார்.

- விமான கட்டணத்தை குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

- கோதுமை விலை சீராக இருப்பதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

- நாக்பூரில் நேரிட்ட தீ விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். நான்கு பேர் காயமடைந்தனர்.

- ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் மற்றும் சமீர் வர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

*----இனி விரிவான செய்திகள்---*

**<<<<<<>>>>>>>>**

ஜி-ஏழு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி சற்றுமுன் இத்தாலி புறப்பட்டு சென்றார்.

இத்தாலி பிரதமர் திருமதி 'Giorgia Meloni -யின் அழைப்பின்பேரில் அவர் Apulia– நகருக்கு புறப்பட்டார்.

மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்ற பின்னர் திரு நரேந்திர மோடி மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டு பயணம் இதுவாகும்.

தமது பயணத்தை முன்னிட்டு, பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்தாலி உடனான நல்லுறவை வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தோ – பசிபிக் மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தவும், தமது அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அந்நாட்டு பிரதமர் கடந்த ஆண்டு இந்தியா வந்திருந்தபோது, ஆலோசிக்கப்பட்ட விஷயங்களின் தொடர்ச்சியாக தமது இந்த பயணம் அமைந்திருப்பதாகவும், இத்தாலி பிரதமருடனான சந்திப்பின்போது செயற்கை நுண்ணறிவு, எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>>

விமான பயணக்கட்டணத்தை குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சராக இன்று பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

பொதுமக்களின் விமான பயணத்தை எளிதாக்குவதற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும், அனைவரும் விமானப் பயணம் மேற்கொள்ளும் வகையில் கட்டண குறைப்பு குறித்து ஆலோசிக்கப்படும் என்றும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>>>>

குவைத் தீ விபத்தில் உயிரிழந்த இந்தியர்களின் உடல்களை விரைவில் தாயகம் கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கான பணிகளை ஒருங்கிணைப்பதற்காக குவைத் சென்றுள்ள வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் திரு Abdulla Ali Al Yahya –வை இன்று சந்தித்து பேசினார்.

உயிரிழந்தவர்களின் உடல்களை இந்தியாவிற்கு கொண்டு செல்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று குவைத் அமைச்சர் இந்த சந்திப்பின்போது உறுதியளித்தார்.

இந்த தீ விபத்தில் 40-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் உயிரிழந்தனர்.

இதனிடையே, இந்த விபத்தில் உயிரிழந்த கேரளாவை சேர்ந்த தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தலா ஐந்து லட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு பினராயி விஜயன் அறிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>>

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் குறித்து கருத்து தெரிவிக்க எந்த நாட்டிற்கும் உரிமையில்லை என்று இந்தியா திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், அண்மையில் சீனாவும், பாகிஸ்தானும் வெளியிட்ட கூட்டறிக்கையில் ஜம்மு காஷ்மீர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றிருப்பதை மத்திய அரசு நிராகரிப்பதாக கூறினார்.

ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகள் இந்தியாவின் பிரிக்க முடியாத மற்றும் ஒருங்கிணைந்த பகுதிகளாக தொடர்ந்து நீடிப்பதாகவும் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் உறுதிபட தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>>

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஆயத்தங்கள் குறித்து இந்திய ஒலிம்பிக் சங்க உயரதிகாரிகளுடன் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று ஆலோசனை நடத்தினார்.

மத்திய விளையாட்டுத்துறை இணையமைச்சர் திருமதி ரக்ஷா கட்சே, இந்திய ஒலிம்பிக் சங்கத்தலைவர் திருமதி பி டி உஷா, மற்றும் அதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி பி டி உஷா, இந்திய விளையாட்டு வீரர்களுக்கு அனைத்து வசதிகளும் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று கூறினார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளை விட, இந்த ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கங்களை இந்தியா எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>>

நீட் தேர்வு விவகாரம் குறித்து உச்சநீதிமன்ற மேற்பார்வையில் நேர்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நீட் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாகவும், போலியான மதிப்பெண் உள்ளிட்ட முறைகேடுகள் குறித்தும் உரிய விசாரணை நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இதில் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும், அரசு எடுக்கும் நடவடிக்கையை பொறுத்தே, நீட் தேர்வு எழுதிய 24 லட்சம் மாணவர்களின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய தேர்வு முகமையை குற்றம் சாட்டி கடமையிலிருந்து மத்திய அரசு தப்பிக்க முடியாது என்றும் திரு மல்லிகார்ஜுன கார்கே அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>>>

கோதுமை விலை சீராக இருப்பதை உறுதி செய்வதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

வெளிச்சந்தையில் கோதுமை விலை உயராமல் தடுக்கவும், பதுக்கல் நடவடிக்கையை கட்டுப்படுத்தவும் மத்திய உணவு மற்றும் பொது விநியோகத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, நாடுமுழுவதும் நடப்பு ரபி பருவத்தில் 11 கோடியே 20 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகவும், இந்திய உணவுக்கழகம் இரண்டு கோடியே 66 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை கொள்முதல் செய்திருப்பதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன்மூலம், மக்களின் தேவைக்கேற்ப கோதுமை கையிருப்பு வைக்கப்பட்டிருக்கும் என்றும் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் பட்டாசு தொழிற்சாலையில் நேரிட்ட தீ விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். நான்கு பேர் காயமடைந்தனர்.

நாக்பூர் அருகே உள்ள Dhamana என்ற இடத்தில் உள்ள தொழிற்சாலையில் இன்று மாலை திடீரென தீப்பற்றியதில் விபத்து ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

காயமடைந்த அனைவரும் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

<<<<<<>>>>>>>>

மகாராஷ்ட்ர துணை முதலமைச்சர் திரு அஜித் பவாரின் மனைவியும், தேசியவாத காங்கிரஸ் தலைவருமான திருமதி Sunetra Pawar மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மனு தாக்கல் செய்துள்ளார்.

மும்பையில் உள்ள சட்டப்பேரவை வளாகத்தில் திரு அஜித் பவார், தேசியவாத காங்கிரஸ் செயல் தலைவர் திரு பிரஃபுல் பட்டேல், அம்மாநில அமைச்சர் திரு சஜன் புஜ்பால் ஆகியோருடன் வந்து அவர் வேட்புமனுவை வழங்கினார்.

இம்மாநிலத்தில், வரும் 25-ஆம் தேதி மாநிலங்களவைத் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>>

ஒடிஷாவில் அஞ்சல் துறை பணி வழங்கப்பட்டதில் சான்றிதழ் முறைகேடு நடைபெற்றதாக கூறப்படும் புகாரின்பேரில் மத்திய புலனாய்வு அமைப்பினர் இன்று பல்வேறு இடங்களிலும் சோதனை மேற்கொண்டனர்.

அம்மாநிலத்தின் Keonjhar, Kalahandi ’உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களின் 67 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

போலிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதில் ஒருங்கிணைந்து செயல்பட்டவர்கள் குறித்த தகவல்களை அதிகாரிகள் திரட்டியதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>>

உலக அளவில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில், 12 கோடிக்கும் மேற்பட்டோர் தங்கள் நாடுகளை விட்டு கட்டாய வெளியேற்றம் செய்யப்பட்டிருப்பதாக ஐ நா தெரிவித்துள்ளது.

ஐ நா அகதிகளுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள சமீபத்திய தகவல் இதனை தெரிவிக்கிறது.

கடந்த ஆண்டு இறுதிவரை சுமார் 11 கோடியே 70 லட்சம் பேர் போர், வன்முறை, மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அவர்கள் நாடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டதாக அந்த தகவல் தெரிவிக்கிறது.

அதிக அளவிலான மக்கள் போர் காரணமாகவே சொந்த நாடுகளைவிட்டு வெளியேறும் நிலை நீடிப்பதாக ஐ நா அகதிகள் அமைப்பிற்கான தூதர் திரு Filippo Grandi தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>>

ஜம்மு காஷ்மீரின் 'Doda 'மாவட்டம் 'Gandoh பகுதியில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையை தொடர்ந்து அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்றிரவு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், சிறப்பு அதிரடிப்படையை சேர்ந்த காவலர் ஒருவர் காயமடைந்தார்.

<<<<<<>>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆஸ்திரேலிய ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் மற்றும் சமீர் வர்மா காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் பிரணாய், 21-17, 21-15 என்ற செட் கணக்கில், இஸ்ரேலின் Misha Zilberman-ஐ வென்றார்.

மற்றொரு போட்டியில் சமீர் வர்மா 21-14, 14-21, 21-19 என்ற செட் கணக்கில், சிங்கப்பூரின் Loh Kean Yew –வை வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

------------------

உலக மகளிர் ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் திவ்யா தேஷ்முக் தங்கப்பதக்கம் வென்றார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற போட்டியில் 10 புள்ளிகளை பெற்று அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-----------

உலகக்கோப்பை துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியாவின் Bhowneesh Mendiratta இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இத்தாலியின் Lonato –வில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் பெற்ற கூடுதல் புள்ளிகளுடன் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில், இந்தியா ஆடவர் மற்றும் மகளிர ் பிரிவில் முதல் சுற்று ஆட்டங்களில் வெற்றிபெற்றன.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் குவைத்தை வென்றது.

மகளிர் பிரிவில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் Macau-வையும், 3-0 என்ற ஆட்டக்கணக்கில் மங்கோலியாவையும் வென்றது.

----------

20 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கால்பந்து தகுதி சுற்றுப்போட்டியில் இந்தியா, ஈரான், மங்கோலியா மற்றும் Laos அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<END>>>>>>>>